# இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2025 யூன்

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2025 யூனில் தயாரிப்பு மற்றும் பணிகள் ஆகிய இரண்டு நடவடிக்கைகளிலும் மேம்பாடுகளை எடுத்துக்காட்டுகின்றன**

**தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), 2025 யூனில் 51.9 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து, தயாரிப்பு நடவடிக்கைகளில் விரிவடைதலினை எடுத்துக்காட்டுகின்றது.** தொழில்நிலை தவிர்ந்த அனைத்து துணைச் சுட்டெண்களும் இம்மாதப்பகுதியில் நடுநிலையான அடிப்படை அளவிற்கு மேல் காணப்பட்டன. புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி துணைச் சுட்டெண்கள் யூன் மாதத்தில் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தன. மேலும், மாதகாலப்பகுதியில் தொழில்நிலை சுருக்கமடைந்த போதிலும், புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்புடன் கொள்வனவுகளின் இருப்பும் விரிவடைந்தன. உலகளாவிய வர்த்தகச் சூழலில் காணப்படுகின்ற தீவிரமைடைந்த நிச்சயமின்மைகளுக்கு பதிலிறுத்தி, அத்தியாவசியமான பதவிகளுக்கு மாத்திரம் ஆட்சேர்ப்பதற்கும் மிகக் குறைந்தளவிலான மூலப்பொருள் இருப்புக்களை பேணுவதற்குமான உபாயரீதியான நகர்வினை பல பதிலிறுப்பாளர்கள் குறித்துக்காட்டினார். அதேவேளை, நிரம்பலர் விநியோக நேரம் மேலும் நீட்சியடைந்தது.


**கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு**

| மாறி | மே | யூன் | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | **55.5** | **51.9** | **-** | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 56.5 | 50.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 55.5 | 52.6 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 56.0 | 49.0 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 50.0 | 50.5 | + | நடுநிலையிலிருந்து அதிகரிக்கின்றது |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 56.7 | 58.2 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தொழில்துறை எதிர்பார்க்கை சாதகமாக காணப்படுகின்றது. எனினும், ஐக்கிய அமெரிக்க வர்த்தகக் கொள்கைகளை சூழ்ந்துள்ள நிச்சயமின்மைகள் பற்றி பதிலிறுப்பாளர்கள் தமது கரிசனைகளை வெளிப்படுத்தினர்.

**தயாரிப்பு கொ.மு.சு 51.9**
**2025 யூன்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு:**
**கொமுசு தயாரிப்புத் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| **உலகம்** | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| **இந்தியா** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **சீனா** | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| **ஐக்கிய அமெரிக்கா** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **ஐக்கிய இராச்சியம்** | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| **யூரோ வலயம்** | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அண்ட் பி குளோபல்[1], 2025 யூலை 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1]எஸ் அண்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), 2025 யூனில் 61.9 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்து, பணிகள் நடவடிக்கைகளில் துரிதமடைந்த விரிவடைதலை எடுத்துக்காட்டுகின்றது.**

பல துறைகளுக்கிடையில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகள் மூலம் துணையளிக்கப்பட்டு, 2025 யூனில் வியாபார நடவடிக்கைகள் விரிவடைந்தன. அதற்கமைய, அதிகரித்த கடன்வழங்கல் நடவடிக்கை மூலம் துணையளிக்கப்பட்டு, வியாபார நடவடிக்கைகள் தொடர்புபட்ட நிதியியல் பணிகள் தொடர்ந்து மேம்பட்டன. மேலும், தொழில்சார் பணிகள், காப்புறுதி, போக்குவரத்து, ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் உண்மைச் சொத்து துறைகள் என்பவற்றின் வியாபார நடவடிக்கைகளும் மாதகாலப்பகுதியில் சாதகமான அபிவிருத்திகளைப் பதிவுசெய்தன. எவ்வாறாயினும், வேறு சில துறைகளிலுள்ள வியாபார நடவடிக்கைகள் மாதகாலப்பகுதியில் பெருமளவில் மாற்றமின்றி காணப்பட்டன.

புதிய வியாபாரங்கள் 2025 யூனில் அதிகரித்தமைக்கு நிதியியல் பணிகள் துறையில் அவதானிக்கப்பட்ட விரிவடைதல்கள் பிரதான காரணமாக அமைந்தன.

பல கம்பனிகளுக்கிடையிலும் ஆட்சேர்ப்புகளின் மூலம் 2025 யூனில் தொழில்நிலை அதிகரித்தது. அதேவேளை, நிலுவையிலுள்ள பணிகள் கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் மாற்றமின்றி காணப்பட்டது.


**கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு**

| மாறி | மே | யூன் | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **57.0** | **61.9** | + | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| புதிய வியாபாரங்கள் | 54.0 | 62.9 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 44.0 | 51.6 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| நிலுவையிலுள்ள பணி | 45.0 | 50.0 | + | வீழ்ச்சியிலிருந்து நடுநிலை |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 73.7 | 75.8 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மூலம் துணையளிக்கப்பட்டு அடுத்த மூன்று மாதங்களுக்கான வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் தொடர்ந்தும் மேம்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இலத்திரனியல் தளமொன்றினூடாக வதியாத ஆளொருவரின் மூலமான பணிகள் வழங்குதல் மீது வரிகளை நடைமுறைப்படுத்தல், ஐக்கிய அமெரிக்க தீர்வையுடன் தொடர்புடைய நிச்சயமின்மைகள் மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியத்தின் அபிவிருத்திகள் என்பன பற்றி சில கம்பனிகள் கரிசனைகளை எடுத்துக்காட்டின.

**கொ.மு.சு**
**பணிகள்**
**வியாபார நடவடிக்கைச் சுட்டெண்**
**2025 யூன்**
**61.9**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| யூரோ வலயம் | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல், 2025 யூலை 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.

பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.